REGD No. M 3438

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந்தமிழுந் தழைத்தினி தோங்குக

MADRAS

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கரு. } திட்டை. விசு—மாசி 1942—மார்ச்—1௨ { திங்கள் எ.

எண்.	உள்ளுறை.	பக்கம்.
1.	மதிப்புரை மஞ்சரி ...	149
2.	சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்	150
3.	திருக்காளத்தியப்பரின் திருவடியடைந்தனர்	152
4.	வள்ளுவர் வனப்பு	153
5.	அண்ணாமலைநகர் சங்கீதமகாநாடு வரவேற்புரை	159
6.	மாயாவாதிகளின் கொள்கை ...	165
7.	இராமநாட் சப்கோர்ட்	166
8.	ஞாயிற்று வழிபாடு ...	167

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், தீட்டை. S. I. R.

செய்தித் திரட்டு.

உள்ளூர்:— சிவாலயத்தில் மாசி ௨௨வ வெள்ளிக்கிழமை மகாசிவ ராத்திரி குலமங்கலம் திரு, சாமியப்பா பிள்ளை வகையார்களின் கட்டளை உபயத்துடன் திரு, வயி. ரெங்கசாமிபிள்ளை மக்களுதவிய அரிசியும் பணமும், தேவகோட்டை திரு, ராம. அரு. ராம. அருணாசலம் செட்டியார் அவர்களின் மகாசிவநிசி நிதியிலிருந்து வந்த ரூ 25-ம் கொண்டு நான்கு கால பூசையும் நன்கு நடைபெற்றது.

எல்லாத் திருத்தலங்களிலும் மகாசிவராத்திரி பூசனை சிறப்பாக நடைபெறக் கட்டளை வைத்துள்ள செட்டியாரவர்கள் சிவநிசிதெரிசிக்கும் அன்பர்களால் பாராட்டப்படுவது பெரும் பேருகும்.

இச்சிவாலயத்தில் மாசி ௧௮வ வளர்பிறை சதுர்த்தசியாகிய இன்று சர்மம் திரு, மூ. பாலசுப்பிரமணிய ஐயரால் நடராஜராபிடேகம் நன்கு நடைபெற்றது. ௧௯வயன்று மாசி மகம் கொண்டாடப்பெறும்.

இச்சிவாலயத்திற்கு ஆத்தங்குடி திருவாளர் ராம. ஆ. ராம. ஆறுமுகம் செட்டியாரவர்கள் சதுர்விளக்கு ஒன்று உதவியுள்ளார்கள்.

இச்சிவாலயத்தில் பிரதோஷபூசையை நியமமாக நடத்திவருவதற்கு வேண்டிய மூலதனம் வைக்கவும், பிரதோஷரிஷபம் செய்துதரவும், பின்னர் அதற்கு வெள்ளிக்கசடு போட்டுத்தரவும் கோனூபட்டு திருவாளர் பெ. சித. வி. விஸ்வநாதன் செட்டியாரவர்கள் உறுதி கொண்டுள்ளார்கள்.

இச்சிவாலயத்தில் திருவருட் சத்தியாகிய உலகநாயகி யம்மைக்கு வெள்ளிக்கவசம் செய்து மகாகும்பாபிஷேகத்திற்கு முன்னிருந்தே அணிய வேண்டுமென்று செட்டிமங்கலம் திருவாளர், சி. ராம. பு. மெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் ஓராயிரம் ரூபா உதவியுள்ளார்கள்.

இச்சிவாலயத்தில் தெக்ஷிணாமூர்த்திக்கு சிறப்புச்செய்யவும் இத்திருத்தலத்தில் குருபூஜைமடம் நிறுவவும் தேவகோட்டை திருவாளர் சரு. சோம. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் உறுதிகொண்டுள்ளார்கள். அவர்களின் அறுபதாவதாண்டு விழாவாகிய மாசி ௨௯வ சித்திரை நாளன்று இச்சிவாலயத்திலும் இன்னும் பல சிவாலயங்களிலும் அபிடேக ஆராதனைகள் செய்யச் சித்தம் செய்துள்ளார்கள்.

இத்திருத்தல சிவாலயத்தில் பேரன்புள்ள பெரியார் அனைவர்க்கும் எல்லாநன்மையும் மென்மேலும்உண்டாகப் பேரிறைவர்சிரருள்புரிவாராக.

பலவான்குடி:—நகர சிவாலயத்தில் தை ௨௪வ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், அன்றிரவு திருவுலாவும் சிறப்பாக நடைபெற்றன. உள்ளூர் வெளியூர்களிலிருந்து அன்பர் பலர் வந்து தெரிசித்தின்புற்றனர்.

வைத்தீஸ்வரன்கோயில்:— ஸ்ரீ கற்பகவிநாயகர் செல்வமுத்துக் குமாரசுவாமி உற்சவம் முதல் பிரம்மோற்சவ மண்டலாபிஷேக கிருத்திகார்த்தம் நடைபெறும் மகோத்சவப் பத்திரிகை தருமை ஆதீனத்தார் வழங்கியுள்ளார்கள். தை ௯வ தொடங்கி நடைபெறுகிறது. சித்திரபானு வைகாசி ௩௦வ மண்டலாபிஷேகக் கார்த்திகை நாள் புஷ்பப்பல்லக்குக் காட்சியுடன் நிறைவேறும். திருவிழாக்காலங்களில் ஆதீன விரிவுரையாளர்கள் மற்றும் பல பேரறிஞர்கள் ஆகியவர்களால் விரிவுரைகளும் நடைபெறும். மாசி ௧௧வ கார்த்திகையன்று முற்பகல் தேவத்தான சண்முகவிலாச பிரசார சபாமண்டபத்தில் சிதம்பரம் செந்தமிழ்ப் போதகாசிரியர் திரு, வேங்கடாசலம் பிள்ளையவர்கள், வேளூர்த் தேவாரம் என்னும் விரிவுரை நிகழ்த்தினர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கரு.	விசு - மாசி 1942—மார்ச்—1உ	திங்கள் எ

"உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

மதிப்புரை மஞ்சரி.

விநாயக சஷ்டி நினைவுமலர்:— இது கோயம்புத்தூர் 21, 125 பேட்டை ஈசுவரன் கோயில்வீதி ஆதிசைவ சபைக்காரியதரிசி ஸ்ரீகௌ. தத்புருஷ சிவாசாரியரவர்கள் கந்தபுராணம் அனந்தன் சாபநீங்கு படலத்திலிருந்து சுருக்கி விளக்கி எழுதிய விரத வரலாறும், தத்துவ விளக்கமும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையும் சேர்ந்த வெளியீடாகும். கணபதி வழிபாடு கைமேல் பலன் என்னும் கருத்துடைய பேரன்பர்கள் வரலாறு தெரிந்து விரதம்இயற்றுதற்கு உரியது.

அண்ணாமலைநகர் சங்கீத மகாநாடு:— 1942 ஜனவரி 23உ கூடிய இம்மகாநாட்டில் கனம், ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையின் வெளியீடு. இதனை இச்சிவநேசன் 159வது பக்க முதல் காணலாம். இவ்வரவேற்புரையானது தமிழ் நாட்டில் தமிழ் இசையைப் புறக்கணிக்கும் தமிழர்களையும் பிறரையும் திருத்தும் பெரு நோக்கத்தைக் கொண்டது. தமிழ்நாட்டில் தமிழ்ப்பயிர் வளர்க்கவேண்டும்; அது தழைக்கவேண்டும் என்பதற்குக் கூட எதிர்ப்பு ஏற்படுவது வியப்பினும் வியப்பே. நாட்டிற்கு நாட்டு மொழியே உரியது என்ற தெளிவு மக்களுக்கு உண்டாகுங் காலமே நற்காலமாகும்.

தமிழ் இசை வளர்ச்சிக்காக மிக்க ஆர்வத்துடன் பல்லாற்றானும் அதனை வளர்க்க முன்வந்துள்ள செட்டிநாட்டரசர் அவர்களைப் பெரிதும் போற்றி மேலும் தமிழை வளர்க்க ஊக்கமுண்டாக்குதலே தமிழ் நாட்டாருக்கு உரிய கடமையாகும்.

காஞ்சி மகாத்மியம்:— என்னும் வடமொழிக் காஞ்சிப் புராணம். ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகிகளின் மாணுக்கர் சித்தாந்த போதாத்நுகரம் ஸ்ரீ கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் மொழி பெயர்த்ததை அவர்களின் மகன் மகனுகிய திரு, கா. ஆ. த. சுந்தரமூர்த்தி பிள்ளையவர்கள் தனது அருமைத்தந்தையார், திரு, கா. ஆ. தணிகாசலம் பிள்ளையவர்களின் நினைவுமலராக அச்சியற்றி வெளியிட்டுள்ளார்கள். இதன்கண் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் ஒருங்கே அடையும் மார்க்கங்களும், மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியவைகளின் மகிமைகளும், பின்னும் பல வரலாறுகளும் காணப்பெறுகின்றன. ஐம்பது அத்தியாயங்களை உடைய இப்புத்தகம் கிடைக்குமிடம் சுந்தர விலாச புத்தகசாலை, 19, ரண்டால்ஸ்ரோடு வேப்பேரி, சென்னை.

திருக்கடவூருலா:— ஸ்ரீ சுப்பிரமணியக் கவிராஜ மூர்த்திகள் இயற்றிய மூலமும், திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், வித்துவான், திரு, இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் எழுதிய அரும்பதவுரையும், குறிப்புரையும், திருக்கைலாய பரம்பரை நந்தி மரபு மெய்கண்ட சந்தானத்துவரு தருமபுரம் வாதீனம் 24-வது குருமூர்த்திகளாக எழுந்தருளியுள்ள உயர்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய மகாசந்நிதானம் அவர்களின் 35-வது ஆண்டு நிறைவு விழா திருக்கடவூர் வீரட்ட சிவாலயத்தில் நடத்தியதன் அடையாளமாக, விசு கார்த்திகை திருவாதிரைநாளில் வழங்கிய 48-வது வெளியீடு. பதிப்புரை, மகாசந்நிதானத்தின் உருவப்படம், முகவுரை, முதற்பதிப்பு மூலத்தின் ஆங்கில முன்னுரை, சிறப்புபபாயிரம், நூலாசிரியரின் தப்பி தநயர் பேரர் கூறியமுருகன் தோத்திரம் முதலியனவும் ஆதீனவெளியீட்டுப் புத்தகங்கள் 48ன் அட்டவணையும் சேர்க்கப் பெற்றுளது. இதன் விலை அணு நான்கு.

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

இங்கிலவுல கெங்கணும் சென்று தேனினுமினிய செந்தமிழ் மொழியால் சிவம் பெருக்கும் விரிவுரைகளாற்றி அன்பர் பலர்க்கும் இன்பூட்டிப் புகழ்மிக் கோங்கிய சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளை அறிவுடை யுலகினர் யாவரும் அறிவர். இப்பெருந்தகையார், பழநியம்பதிக்குச் சென்று தமது வழிபடுதெய்வமாக விளங்கும் முருகப்பெருமானை திருவாவினன்குடியில் தெரிசித்தும், ஆங்கு சைவசித்தாந்த சபையின் முதலாவது ஆண்டுவிழாவில் தலைமை வகித்து அச்சபையிலும், அவ்விழா முடிந்தபின்னர் ஒருவாரம் வரையிலும் அங்கிருந்து தைப்பூச விழாத் தொடக்க முதல் பலவிரிவுரைகளாற்றி சிவத்தின் பெருமையும், சிவகுமாரரின் மகிமையும், செந்தமிழின் சீர்மையும் விளக்கி விசு ஆண்டு தைத்திங்கள் ககூ-ம் நாள் பூசத்தன்று சிவபரமான இலிங்கமாயினர் என்ற செய்தி கேட்டு அன்பர் அடி[illegible] கலக்கத்தாழ்ந்துள்ளார்

கள். மாதா பிதாக்களின் மேம்பட்டவராக, அறியாமையையகற்றி அறிவைப்பெருக்கியருளும் குருநாதரைப் பிரிந்து எங்ஙனம் மனம் வருந்தாதிருக்க இயலும்? நங்குருநாதராகிய ஞானியாரடிகள் "இன் சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலா லென்றும் மகி ழாதே" எ தற் கிலக்கியமாக விளங்கி இனியவை பேசி எங்களை மகிழ்விப்பரே! இனிஇவர்களைக்காணவோ இவர்களின் திருவாக்கை கேட்கவோமுடியாதாயிற்றே! சைவசித்தாந்த சமாஜமாதிய பலசங் கங்களைத் தோற்றுவித்தும் பலசங்கங்களில் தலைமைவகித்தும்எங்கள் மணிவாசக சங்கத்திற்கு பலவான்குடிக்கும், திருத்தென்குடித் திட்டைக்கும் எழுந்தருளித் தலைமைவகித்துசிவானந்தத்தேன் ததும்ப, சீரிய விரிவுரைகளாற்றியும் அருட்டிருநீறு வழங்கியும் எங்களை வாழ்வித்த எங்கள் அருட் குருநாதரை மெய்த்தவவேட வுத்தமரை இறைவர் திருவருளிற் சேர்த்துக்கொண்டதன் பயனாக நாங்கள் ஆவைப்பிரிந்த கன்றுபோல அரற்றுவண்ணம் அவர்களரசு செலுத்திய திருக்கோவலூராதீனம்திருப்பாதிரிப்புலியூர்மடாலயத் தில்அவர்களின்ஐந்தாவதுபட்டத்திற்குப்பின்வரும்ஆறாவதுஞானி யார் சுவாமிகளவர்கள் அருள் வளஞ்சுரக்கத் திருவருளைப் பிரார்த் திக்கின்றேம்.

ஸ்ரீமுக வைகாசி ௫௳ (17—5—1873) மூலநாள் வியாழக் கிழமை அதாவது சிவம் பெருக்கும் பிள்ளையார் திருநட்சத்திரத் தன்று தோன்றி, விரோதி கார்த்திகை ௭௳ (20—11—1889)ல் ஆதீன கருத்தராகி விசு தை ௧௯௳ (1—2—1942) பூசநாளில் திருவருளிற் கலந்து அடுத்த நாள் திருப்பாதிரிப்புலியூர் மடாலயத் துக் குருபூஜாகோட்டத்தில் சமாதி நிலை அடைந்த நமது அடிக ளார்க்கு தை ௨௯௳ சிவலிங்க பிரதிஷ்டையும் மகா அபிடேகமும் சிவகணாராதனையும் செய்யப்பெற்றன.

இவர்களின் திருமேனி மறைவு குறித்து சைவசித்தாந்த மகாசமாஜத்தாரும், காஞ்சி, மெய்கண்டார் கழகத்தினரும், ஏனைய கழகத்தினர் பலரும் நினைவுக் கூட்டங்கள் கூட்டியும், திருச்சிராப் பள்ளி தமிழக இளைஞர் மன்றத்தாரும், கரந்தைத் தமிழ்ச்சங்கத் தாரும் கையறு நிலைச்செய்யுட்கள் இயற்றிவெளியிட்டுமுள்ளார்கள்.

கண்டாச்சிபுரம் செந்தமிழ்க் கழகத்தினர், கூட்டம் கூட்டி சீரிய புலவர் பெருமக்கட்கும், வேதாந்த சித்தாந்த அனுபவஞானி கட்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கிய அடிகளாரின் பிறிவாற்றா மையை அடிகளின் மடாலயத்திற்குத் தெரிவித்துக்கொண்டனர். அக்கழகத்தினர் விடுத்துள்ள பிரிவாற்றா நிலைச் செய்யுட்களும் திரு நட்சத்திரக்குறிப்புச் செய்யுளும் அடுத்த திங்களில் வெளியிடப் பெறும்.

திருகாளத்தியப்பரின் திருவடியடைந்தனர்.

சிவனெமறவாச்சிரியோரும், சிவபூஜா துரந்தாரும், திருப்பணிச் செல்வர் வழித்தோன்றலும், பெருங்கொடையாளருமாகிய தேவகோட்டை திருவாளர், மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்கள், திருக்கைலாயத்தின் ஒருபாகமாகிய திருக்காளத்தியில், மாசி 2௳ வெள்ளிக்கிழமை மஹாசிவராத்திரியில் நான்குகாலமும் சிவாலயத்தில் தெரிசனம் செய்த பின்னர், காலையில் நீராடி, திருநீறணிந்து சிவபூஜை புரிந்து, ஜெபமாலை கைக்கொண்டு, திருவைந்தெழுத்தோதின நிலைமையில், உத்தராயண புண்ணியகாலமாகிய மாசி௴ ௩௳ சதுர்த்தசியன்று காலை 11 மணிக்கு ஞானப் பூங்கோதையுடனுறை திருக்காளத்திநாதர் திருவடி யடைந்தனர். சிவவேடப் பொலிவுடன் கூடிய இவர்களின் திருமுகத்தைக்காணப் பெறுதாயிற்றே! குணப்பெருங் குன்றமாகிய இவர்களுடன் கலந்து திருக்காளத்தியப்பரைத் தெரிசிக்க இயலாதாயிற்றே! பெருங்கொடை வள்ளலாகிய இவர்களைக் கண்டு அமைதியாக அளவளாவி மகிழ இயலாதாயிற்றே என வருந்துகின்றோம்.

ஆயினும் பெறற் கரியபேறு பெறற்குரியாரிவர்களே என்று விளக்கிய சிவச்செயலால் தெளிவுறுகின்றோம்.

திருக்காளத்தியில் சிவாலயத்திருப்பணியைச் செய்து நிறைவேற்றி, சாதாரண௵ ஆவணி௴ ௩௧௳ வியாழக்கிழமை உத்திராட நாளில் மகாகும்பாபிடேகத்தை மாண்புடன் நடாத்தினார்கள். வரையாது வழங்கி வண்புகழ் பெற்றார்கள்.

'அண்ணாமலையனையும் ஆரூர்த் தியாகரையும் கண்ணனை காளத்தி நாதனையும், நண்ணரிய-சிற்றம்பலவனையும் தென்மதுரைச் சொக்கரையும் நித்தம்பலகால் நினைமனமே.' என்று முன்னோர் கட்டளையிட்டபடி நித்தமும்நினைந்து போற்றிப் பூசனைபுரிந்தார்கள்.

"வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாது சொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச் சென்
றாளவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே."

என்ற பட்டினத்தடிகளின் கேள்விக்கு விடை பகருமாபோலவும், திருவொற்றியூரில் வதிந்து 'செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக் கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.' என்று போற்றிய பலனாகவும் மாசிவராத்திரி நான்குயாமமும் வழிபாடாற்றி, திருநீறணிந்து, சிவத்தியானத்துடன், திருவைந்தெழுத்தோதி தெக்ஷிணகைலாயம் மூன்றனுள் முதன்மையும் ஐம்பூதத் தலங்களுள் ஒன்றுமான திருக்காளத்தியில் காளத்தியப்பர் கழலடியிற் கலந்தனர்.

இதுவே பெறற்கரும்பேறு; இவர்களே பெறுதற் குரியார். இவர்கட்குத் திருவருள் நலமுதவிய இறைவர் இவர்களின் வழித்தோன்றல்கள் தழைத் தோங்கவும் தண்ணருள் பாலிப்பாராக.

வள்ளுவர் வனப்பு.

(அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்,
திரு, வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் M. A. B. L.)

தமிழன்பர்களே!

திருவாசகம் என்னும் தேனிலிருந்து ஒரு துளியை இனிது சுவைப்போம்:

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

இதனால், இறைவன் நமக்குத் தலையைக் கொடுத்திருப்பதின் நோக்கம் அவனுடைய வார்கழலை வணங்குவதற்காகவே என்பது போதரும். இக்கருத்துப் பற்றியே வாகீசப் பெருந்தகையும், "தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை" என்றார்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே"

இவ்விருவருக்கும் மிகவும் நீண்ட காலத்தே தோன்றி நமக்குத் திருக்குறளை அருளிச் செய்த திருவள்ளுவ தேவரும் நாம் தலை பெற்றதன் பயன் என்ன என்பதை வெகு அழகாக ஒரு குறளிற் பொறித்திருக்கிறார்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்பது அக்குறள். எவ்வாறு ஐம்பொறிகளுக்கும் கண்டுகேட்டுண்டுயிர்த்து உற்றறிதல் இன்றியமையாதனவோ, அதேபோல், எண்சாண் உடம்பிற்கும் பிரதானமாகிய சிரசிற்கும், இறைவன் தாளை வணங்குதலே வேண்டுவது. சுவையை நுகரவியலாத நாக்கு என்ன நாக்கு? புண்ணுக்குத்தான். "சிற்கைநா, கலப்பைநா, இவையுமுண்டாதலின்" என்பர் அடியார்க்கு நல்லார்.

அவ்வாறே, தலைவன் தாளடியில் தாழாத தலை என்ன தலை? தறுதலை. குணமிலவே வணங்காத்தலை, என்றதன் கருத்து ஊகித்தறிந்து இன்புறற் பாலது. தலையிலிருப்பதென்ன? அதுதான் மூளை; இங்கே நாம் அறிவு என்று கொள்ளலாம்.

> "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்"

என்னும் அருமைத் திருவாக்கிற் கேற்ப, தலைவன் தாளைத் தலை இறைஞ்சினால், அச்செயல் அங்கே நல்லறிவு இருத்தலைப் புலப்படுத்தும். அவ்விதம் வணங்காத தலையில் அறியாமையே குடிகொண்டிருக்கும் என்பதே பொருளாகும். வழக்கிலுங்கூட, அறியாப் பேதை ஒருவனை, "உன் மண்டையில் என்னடா இருக்கிறது? களிமண்ணா? என்று கேட்கிறார்கள்.

மேற்கூறிய "கோளில் பொறியில்" என்னும் குறள்உரையில், பரிமேலழகர், "காணாதகண் முதலியனபோல வணங்காத தலைகள் பயனில எனத்தலைமேல் வைத்துக்கூறினாரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனிலவென்பதூஉங் கொள்க" என்றார். நாக்களும் கொள்ளப்படுமேல், உடம்பிலுள்ள ஏனை அங்கங்களையுமே கொள்ளலாமென்பது தேற்றமாகும். அங்ஙனமாயின், ஆண்டவரசுகள் அன்பாயமைத்த திருவங்கமாலை முழுவதும் அக்குறளடியின் ஆழ்ந்த கருத்தாக அமையப்பெற்றிருக்கிறது என்று கொள்வதில் ஒன்றும் இழுக்கில்லை.

'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் நாயனார், எழு குறள்களில் இறைவனுடைய அடியைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இது சித்தாந்தக் கருத்துக்களோடு இசைந்ததொன்றாகும். பதியின் தாழ்ந்த அங்கமாகிய தாளோடு பசுவின் சிறந்துயர்ந்த அங்கமாகிய தலை பொருந்தி, தாடலைபோல நிற்றலே இம்மனிதப் பிறவியை எடுத்ததாற் பெறும் பயன் என்பது அறிவாளிக்கு ஒப்ப முடிந்த தோருண்மையாகும். ஏனெனில், இறைவன் தாளையே புணையாகக் கொண்டு நாம் பிறவிக் கடலைக் கடத்தல் கூடும்.

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவன் அடிசேரா தார்"

இக்குறளடியிற்கண்ட கருத்து அப்பர் திருவாக்கு ஒன்றில் இனிது விளங்கிக் கிடத்தலை நாம் இங்குத் தெரிந்து கொள்ளலாம்.

"துன்பக்கடலிடைத் தோணித்தொழில் பூண்ட தொண்டர்தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந்திறத்தன மாற்றயலே
பொன் பட டொழுகப் பொருந் தொளி செய்யுமப் பொய்
அன்பர்க் கணியன் காண்க ஐயாறனடித் தலமே" [பொருந்தா

ஏழு சீர்கள் வரப்பெறும் குறள் வெண்பாவால் யாத்த திருக்குறளின் முதல் அதிகாரத்தில், ஏழு குறள்களில் இறைவன் தாளைக் காண்கின்றோம். வள்ளுவர் வாக்கினின்றெழுந்த தமிழ் மறையில் இரண்டிரண்டு அடியாக வந்துள்ள ஒவ்வொரு குறளிலுமே சிவ பெருமானின் திருவடிகளைக் காணலாம் என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

"என்னடிகள் வெண் குற ளோரடியிரண்டு
மென்றலையி லிருந்து மிறை"

(திருவெங்கைக் கலம்பகம்)

அக்கற்பனையிற் கைவந்த கவிப்புலவர், திருவள்ளுவரை "என்னடிகள்" என்று பாராட்டுகின்றார். ஒவ்வொருகுறளும் முதலடி நான்கு சீரும், இரண்டாவது அடி முச்சீருமாக, இரண்டடிகளை யுடையது. அவ்விரண்டடிகளும் சிவபெருமானுடைய இரண்டடிகளையும் ஒக்கும் என்பதே துறைமங்கலம் சுவாமிகளின் கருத்து. எவ்வாறு இவ்வுவமை பொருந்தும் எனிற் கூறுவாம். திருக்குறளடி இரண்டில், ஒன்று நாலு சீர்த்தமாய் நீளமான அடி; மற்றொன்று முச் சீர்த்ததாய்க் குறுகலான அடி. இவ்விதமே சிவபெருமான் திருவடிகளுள் ஒன்று மற்றொன்றைவிடக் குறுகிய அடியாகவே காணப்படும். முதலதாகிய நீண்ட அடியை, வலப்பக்கத்து அத்தனது அடியாகவும் சிற்றடியை இடப்பக்கத்தான அம்மையது அடியாகவும் ஒப்புநோக்கி உளங்குளிர்ந்து போற்றிய சுவாமிகளின் கவி வன்மையை உணரும் சைவர் ஒவ்வொருவரும் உள்ள முருகி மெய்பவசமாவரென்பது ஒருதலை. இங்கு, சிவப்பிரகாசர், சிவன் உமையொடுகூடி விளங்கும் காட்சியைத் திருவள்ளுவர் நூலின் ஒவ்வொரு குறளிலும் கண்டு களிக்கிறார். இதை நான் அறிந்த நாள் முதற்கொண்டு திருக்குறளைப்படிக்கும்போதும், காணும்

போதும், நினைக்கும்போதும், எனக்கு சிவபெருமானின் அர்த்த நாரீசுவர வடிவமும், அதைக்குறித்து அப்பர் பாடியுள்ள பாட லொன்றும் மனக்கண்முன் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அப்பாடல்,

"புதுவிரி பொன் செயோலை யொருகா தொர்காது சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத வொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர் குழல்பாகமாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள் வண்ண வண்ண மெழில் வண்ண
[வண்ண மியல்பே"

என்னும் திருநாவுக்கரசின்தேவாரமாகும். சிவப்பிரகாசர் இவ்விதம் நயம்படக் கூறியதின் உட்கருத்தாவது. திருக்குறளைக் கற்கு முறையிற் கற்று அதன்படி ஒழுகுவோர் ஈசன் கழலடியைச் சேர்வது ஒருதலை என்பதும், சிவன்கழல் நல்கும் சிறப்பெல்லாம் செந்நாப் போதாரின் செவ்விய நூல் சீருடன் அளிக்கும் என்பது மாகக் கொள்ளலாம்.

எட்டுவகை வனப்புக்களுள் முதன்மையானது அம்மை வனப்பு. அம்மையாவது சிலவாய் மெல்லியவாய சொற்களால், ஒள்ளியவாய பொருண்மேற் சில அடியாற் சொல்வது. இதற்கு உதாரணங் கூறவந்த இலக்கண உரையாசிரியர்கள் எல்லாம் திருக் குறளிலிருந்தே எடுத்துக் காட்டினர். குணசாகரர் முதலியோர்.

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை"

என்ற குறளை எடுத்தாண்டனர். பேராசிரியர் காட்டிய உதாரண மும் வேறொரு திருக்குறளாகவே முடிந்தது.

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர் காணும் பூவொக்கு மென்று." என்பது

அக்குறளாகும். இதனால் அம்மை வனப்புடன் கூடிய வேறொரு நூல் கிடைப்பதன் அருமை நன்கு புலனாகும். கருத்தாவாகு பெயர்க்கு உதாரணம் எல்லாரும் "திருவள்ளுவர்" என்றே கூறிப் போந்தனர். வேறு உதாரணம் இல்லாததே இதன் காரணமாகும். இவ்விதத் தனிச் சிறப்புக்களோடு, அம்மை வனப்பும் வாய்ந்து

விளங்கும் திருவள்ளுவராகிய திருக்குறள் நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு பொருள் மேலும் பத்துக் குறளாக, அறம், பொருள், இன்பம் என மூன்று பாலாகப் பிரித்து வள்ளுவர் தம் நூலைச் செய்திருக்கிறார். பத்துப் பத்துக் குறளாக ஒவ்வொரு அதிகாரமும் அமைந்த திறத்தை, சிவப் பிரகாசர் வியந்து திருமாலின் பத்தவதாரங்களோடு மொப்பிட்டார்.

"வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதும் துணிவுபோல்—கற்பகத்தால்
ஓதும் பிரமமொரு தானென்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினேன்."

(திருவெங்கை யுலா)

இவ்வுலகின்கண் காணப்பட்ட பல்வேறு நாடுகளுள்ளும் நம் பரத கண்டமாகிய இந்தியா தேசமொன்றே ஊனுடலைக்கண்டிக்கிறது. அதிலும், இந்தியாவின் தென்பாகத்திலேதான் புலால் மறுத்தல் அதிதீவிரமாகவும் உணர்ச்சியுடனும் கையாளப்பட்டு வருகிறது என்றால், நம் தாய்நாடாகிய தமிழ் நாட்டிற்கு இதைவிட வேறோர் தனிச் சிறப்பும் வேண்டுமோ! இவ்வகையில் நமக்கு கிடைத்துள்ள தமிழ் இலக்கிய நூல்களிலே மிகவும் பழைய நூலாகக்காணப்பட்டு, முதன் முதலாக, கொல்லாமையையும் ஊனுண்ணாமையையும் போற்றும் நூல் திருக்குறளேயாகும். இஃதோர் ஒப்பருந் தனிச் செப்பருஞ் சிறப்பன்றோ! அங்ஙனமாயின், அக்கொள்கையைக் கூறி வலியுறுத்த முதலதாக முன் வந்த அப்பெரியாரின் பெருமை தான் என்ன!

"உண்ணாமை யுள்ள துயர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு"

என்ற குறளை உரையாசிரியர்கள் தாப்பிசைப் பொருள்கோளுக்கு உதாரணமாகஎடுத்துக்காட்டுவர். இக்குறளில்இன்னுமொருநயமும் உண்டு. 'ஊனுண்ண வண்ணாத்தல் செய்யா தளறு' என்றதால் நரகங்கூட ஊனை உண்ணுவதற்கு வாயைத் திறவாது: ஏனெனில் தசையாலாகிய உடல் உலகிற் சுழன்று விழவும், சூக்குமமாகிய உயிரொன்றே நரகையடைவது உண்மையாகலின். எனவே, ஊன்

தின்றழலும் வன்கணாளரின் வயிறு நரகை விடக் கொடிது என்பது சொல்லாமலே விளங்கும்.

பெறுதற்கரியதொரு பெருநிதியாகிய திருக்குறள், தமிழுலகம் செய்த தவத்தாலும், நலத்தாலும், நமக்குக் கிடைத்திருக்கிறது. அதன் சிறப்பைக் கண்டு பிறநாட்டினரும் தத்தம் மொழிகளிற் பெயர்த்தெழுதிப் படித்தின்புறுகின்றனர். "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்ற பாரதியாரும்,

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே—தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார்.

இதனால் வள்ளுவர் திருக்குறளின் உலக வியாபகம் வெளியாகும்.

திருக்குறள் எழுந்த காலத்திற்குப் பின்பட்டுத் தோன்றிய நூல்களிலெல்லாம் வள்ளுவரின் குறட்பாக்கள் வளம்பெற எடுத்துக்கையாளப்பட்டிருக்கின்றன. கோவை, உலா, அந்தாதி, தூது, கலம்பகம் முதலிய பிரபந்தங்களிற் குறளடிகள் அப்படி அப்படியே காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரபந்தத்தின் இயல்பை எடுத்தோதும் இலக்கணத்தோடு குறளடி கையாளுதலையும் அவ்விலக்கணத்தின் ஓர் உறுப்பாகச்சேர்த்துவிடலாம் போன்றிருக்கின்றது. திருக்கைலாய ஞானவுலா, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலெல்லாம் திருக்குறளடிகளும் கருத்துக்களும் ஆங்காங்குக் காணப்பட்டு, படிப்போர்க்கு உவட்டாவிருந்தாய் சுவை விளைக்கின்றன. திருவள்ளுவரைத் தமிழ் இலக்கியத்திலிருந்து வேறு பிரிப்பது கூடாத காரியம். அவ்விதம் ஒருக்கால் பிரித்தாலுங்கூட, தசைகள் கழிந்த எலும்புக்கூடு போன்றே தமிழ் இலக்கியம் காணப்படும். ஆகவே, திருக்குறள் தமிழ் மொழிக்கே சீவநாடியாய்ச் செம்மை யளிக்கின்றது. இஃதறிந்தே, நாம் உய்த்தறிந்துணர நின்ற புத்தேரிப் புலவரும்,

"வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறல் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி யொழுகுவமே"

என்று கனிவுறப் பாடியுள்ளார். —தமிழ்ப்பொழில்.

உ

அண்ணாமலைநகர் சங்கீத மகாநாடு,

கனம், ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் வரவேற்பு உரை.

23—1—1942.

கனவான்களே!

இந்த சர்வகலாசாலையார் அழைப்பிற் கிணங்கி, இன்று முதல் இங்கு கூடும் மகாநாட்டிற்கு நீங்கள் விஜயம் செய்திருப்பதற்கு எனது மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகிறேன். உங்களுடைய சொந்தக் காரியங்களையும், இங்கு வந்து போவதினால் உண்டாகும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் சில தினங்கள்வரை அண்ணாமலை நகரில் தாமதித்து, தமிழிசைக்காக உதவிபுரிய நீங்கள் ஒப்புக்கொண்டிருப்பதை சர்வ கலா சாலையார் முழுமனதுடன் பாராட்டுகிறார்கள். கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சியிலும், அதன் தற்கால பிரபலமான நிலைமையிலும் உங்களுக்கு அரியபெரிய பங்குண்டு. உங்களது உழைப்பாலும் உங்களில் ஒவ்வொருவருக்கும் சங்கீதத்தில் உள்ள பிரத்தியேகமான நிபுணத்துவத்தாலும் கர்நாடக சங்கீதமானது புத்துயிர்பெற்று விருத்தியடைந்து வருகிறது. இந்தக்காரணத்தினாலேயே, கர்நாடக சங்கீதத்தின் ஒரு அம்சமான தமிழிசை இயக்கத்திலும் நீங்கள் ஈடுபட உரிமையுண்டு. அந்த இயக்கத்தில் உங்கள் வித்வத்தின் பயனை உபயோகப்படுத்துமாறு கேட்கத் தமிழ்மக்கள் எல்லோருக்குமே பாத்தியம் உண்டு. ஆகையால், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி நீங்கள் இங்கு வந்திருப்பதில் எங்களெல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி எற்பட்டிருக்கிறது.

இந்த மகாநாடானது எதற்காகக் கூட்டப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். முதல் முதலாக நமது நோக்கம் என்னவென்பதை நிச்சயித்துக்கொள்ளவேண்டியது அவசியம். அதைப் பற்றி அனாவசியமான சந்தேகங்களும் சர்ச்சைகளும் எற்படாவண்ணம் பொறுப்புள்ள விதமாக, நாம் செய்யப்போகும் காரியத்தின் எல்லையைக் குறிப்பிட வேண்டும். இங்கே சென்ற ஆகஸ்ட்மாதம் நடந்த மகாநாடு சம்பந்தமாகவும், சர்வகலாசாலையின் ஆதரவில் தமிழிசை வளர்ச்சிக்காகச் செய்யப்படும் காரியங்கள் சம்பந்தமாகவும் உள்ள நோக்கம் பலமுறை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆயினும், தமிழ் நாட்டு சங்கீத உலகத்தில் பிரகாசித்து விளங்கும் வித்வான்கள் அடங்கிய இம் மகாநாட்டில் அதை சரிவர, சாங்கோபாங்கமாகக் குறிப்பிடுவது நலமென்று நினைக்கிறேன்.

தமிழ்ப்பாட்டுகள் அபிவிருத்தியே இந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம். சங்கீதத்திற்கு ஏற்றதான பாட்டுகள் தமிழில் இருக்கின்றன. அவைகளில் சில பாட்டுகள் அனுஷ்டானத்தில் இருக்கின்றன; பல மறைந்து கிடக்கின்றன. அனுஷ்டானத்திலுள்ள பாட்டுகளை மட்டிலுமே பொது ஜனங்கள் அறிவார்கள். இவையல்லாது, பிரபலமடையாமல் சிலருக்கு மட்டும் தெரிந்து, வெளிவராமல் மறைந்து கிடக்கிற, சில பாட்டுகள் பிரசுரமாக வேண்டியது அவசியம். யோக்கியதைக்கும் பிராபல்யத்துக்கும் இணை பிரியாத சம்பந்த முண்டென்று சொல்ல முடியாது. யோக்கியதை நிரம்பியவர்களில் பலர் தங்கள் வித்வத்தைப் பிரபலப்படுத்துவதில் அவ்வளவாக கவனம் செலுத்தவில்லை. இதனால் வெளிவந்த பாடல்கள் உயர்ந்தவையென்றும், மறைந்திருப்பவை யோக்கியதை அற்றவையென்றும் சொல்லமுடியாது. வெளிவராமலும், ஆனால் சுவை நிரம்பியதுமான பாட்டுகள் தமிழில் அநேகம் இருக்கின்றன. எல்லாவகைத் தமிழ்ப்பாட்டுகளிலும் இசைச்சுவை நிரம்பிய பாட்டுகளைத் தொகுத்து வேண்டிய இடங்களில் அவைகளை இசைக்கு இணைத்து, வெளிப்படுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்தினால், அதைத் தமிழர்கள் மிகவும் பாராட்டுவார்கள். தமிழ்ப்பாட்டுகள் பிரபலமாக இந்த நாட்டில் பாடப்படுவதற்கு, வர்ணம், கீதம், ஸ்வரஜதி முதலானவை போதுமான அளவிற்கு இல்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்விதமான குறையிருந்தால் அக்குறையை நிவர்த்தி செய்வதில் உங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். நீங்கள் சொல்லும் யோஜனைகளைக் கூடுமானவரை நிறைவேற்றுவதற்கு இந்த சர்வகலாசாலையார் வேண்டியதைச் செய்வார்கள். தமிழிசைக்கு நீங்கள் புரியும் சேவையும் மகத்தானதாகும்.

நாம் இன்று செய்ய எத்தனிக்கும் காரியத்தால் கர்னாடக சங்கீதம் என்ற சங்கீதமுறைக்கு ஏதோபங்கம் விளைவிக்க நாம் எண்ணுவதாக யாரும் கருதக்கூடாது. கர்னாடக சங்கீதமென்பது நமக்கும்; நம்மைச் சுற்றியுள்ள ஆந்திரர், கன்னடர் முதலிய சகோதரர்களுக்கும் பொதுவானது. அதைத் தமிழர் முதலில் கையாண்டு, அவர்களிடமிருந்து ஆந்திரர், கன்னடர் முதலியவர்கள் ஸ்வீகரித்துக் கொண்டார்களா, அல்லது அவர்களிடமிருந்து தமிழர்கள் சுவீகரித்துக்கொண்டார்களா? அல்லது இவர்கள் எல்லோருக்கும் பொதுவான பிதுரார்ஜித சொத்தா? என்ற வாதங்களில் நாம் இறங்கவேண்டியதில்லை. அது எவ்விதமிருந்தாலென்ன? யமுனை, கங்கை முதல் காவேரி, தாம்பிரபரணி வரை ஒரே நாடாக பண்டைக்காலம் முதல் பாவிக்கப்பட்டு வந்திருக்கும் பாரதபூமியின் கலாசாரம், கலைமுறை, நாகரீகம்எல்லா இந்தியருக்கும் பொதுஉடைமை. பண்டிதர்கள் விஷயஞான வளர்ச்சிக்காக இவ்வித சர்ச்சைகளைச் செய்யலாம். மற்ற

வர்கள் இதைக்காரணமாக வைத்துக்கொண்டு விவகாரத்தை உண்டுபண்ணுவது கொஞ்சமும் சரியல்ல. மேலும், ஞானமும் கல்வியும் எங்கிருந்து வந்தாலென்ன? நமது மாகாணத்தில் விளைந்தால் தான் நாம் ஆதரிப்பது, இதர மாகாணங்களிலிருந்து வந்தால் தள்ளுபடி செய்வது என்பது கிடையாது. பாஷைகளில் காணப்படும் ஒற்றுமைகள் இதற்கு ஒரு அத்தாட்சி. இந்த நிலைமையில் இதர பாஷைகளில் உள்ள பாட்டுகளில் தமிழ் மக்களுக்கு எவ்வித அருவருப்பும் கிடையாது; இருக்கஇடமுமில்லை. ஆனால், மற்ற பாஷைகளில் உள்ள பாடல்களே உயர்வு; சங்கீதத்திற்கு ஏற்ற நல்ல பாடல்கள் தமிழில் இல்லை; எவ்வளவு முயற்சித்தாலும் உயர் தரப் பாடல்கள் தமிழில் இயற்றமுடியாது என்று நினைப்பது தவறாகும். நம் தாய்மொழியாகிய தமிழிலும் மிதமியாகப் பாடல்கள் வேண்டும்; அவைகளை நாம் கேட்கவேண்டும்; கேட்டு ஆனந்தமடைய வேண்டுமென்பதே தமிழரின் ஆசை.

சிலர் மனதில் தமிழிசை இயக்கத்தைப் பற்றி வித்தியாசமான எண்ணம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை நாம் அகற்றவேண்டும். ஜனங்கள், அர்த்தம் தெரிந்துகொள்ளக் கூடிய தமிழ்ப்பதங்கள்கொண்ட பாட்டுகள் பாடிக்கேட்க விரும்புகிறார்கள். தமிழில் மேன்மேலும் பாட்டுகள் வேண்டுமென்று தமிழர்கள் எண்ணுவதும் இதற்காக காணப்படும் இயக்கமும் நியாயமானவை யென்று ஸ்ரீமான் கோபாலரெட்டியார் அவர்கள் சமீபத்தில் நடந்த தியாகப்பிரம்ம உத்ஸவத்தில் சொன்னார்கள். கர்னாடக சங்கீதமுறை என்பதன் வரம்பிற்குட்பட்டு, தியாகப்ரும்மம் போன்ற மகான்கள் போக்கை அனுசரித்து, அவர்கள் காட்டிய வழியில், பக்தி சிரத்தையுடன் சென்று, தமிழ்ப்பதங்களை உபயோகித்து, பாட்டுகள் பாடக்கேட்டு, தமிழ் மக்கள் பொருளும் அறிந்துகொண்டு, சங்கீத அனுபவம் அடைய வேண்டுமென்பதற்குத் தான் இந்த இயக்க மென்று பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணாமலை நகரில் சென்ற ஆகஸ்ட் மாதத்தில் கூடின மகா நாட்டில், தமிழ்நாட்டில் தமிழ்ப்பாட்டுகள் பெரும்பாலும் பாடவேண்டுமென்று தீர்மானமாகி இருப்பதை ஒரு சிலர் தெலுங்குப்பாட்டுகளையே நிராகரித்து, தமிழ்ப்பாட்டுகளைத்தான்முற்றிலும் பாடவேண்டுமென்று தீர்மானித்திருப்பதாய்த்தவறாகச் சொல்லுகிறார்கள். அவ்விதமான தப்பிதத்தைப் பலவகையில் எடுத்துக் காட்டின பின்னும் அவர்கள் சொன்னதையே விடாமல் பிடிவாதமாகச் சொல்லுகிறார்கள். உண்மையில் தூங்குகிறவர்களை எழுப்பலாம்; தூங்குவதாகப்பாவனை பண்ணுபவர்களைத் தட்டி எழுப்புவது முடியாது. இதுபோன்ற தப்பெண்ணங்களினால் தமிழிசை இயக்கத்தை எதிர்க்க சிலர் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த எதிர்ப்பில் சங்கீதத்திற்கு சாஹித்தியம் அவசியம் இல்லை, சாஹித்தியம் இரண்டாம் பக்ஷம் என்று சொல்லப்படுகிறது. சிலர் சாஹித்தியம் தேவையில்லை, வீண் வில்லங்கம் என்று கூடச் சொல்லு கிறார்கள். இதை வைத்துத் தமிழ்ப் பாட்டுகள் வேண்டியதில்லை, தமிழிசை இயக்கம் அனாவசியம் என்று முடிவு செய்கிறார்கள். இதற்கு சுலபமாக ஒரு பதில் சொல்லலாம். சாஹித்தியம் இரண்டாம் பக்ஷம் என்றால் அது தெலுங்கில்இருந்தால்என்ன,தமிழில்இருந்தாலென்ன, கன்னடத்திலிருந்தாலென்ன, எந்தபாஷையில்தான் இருந்தாலென்னஎன்றுபலர்சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில்சங்கீதத்திற்குசாஹித்தியம் அவசியம். சாஹித்தியமற்றசங்கீதம்பயிற்சிஅடைந்தவர்களுக்குஒருவேளைபோதுமானதாகஇருக்கலாம். சாதாரண ஜனங்களுக்கு நவரசங்களும் மனதில் பதிந்து ஆனந்தமடைய வேண்டுமானால் சாஹித்தியம் அவசியம். சென்னை அகாடமியில் சென்ற மாதம் அக்கிராசனம் வகித்தவிஜயநகர சமஸ்தான சங்கீத கலாசாலை அதிபரும் பிரபல வித்வானுமான ஸ்ரீமான் வெங்கடசாமி நாயுடு அவர்களும் சங்கீதத்திற்கு சாஹித்தியம் மிகவும் அவசியமென்று சொன்னார்கள். மேலும், சங்கீதத்தில் கிருதிகளுக்கு முக்கிய ஸ்தானம் உண்டென்றும், அவைகளின் பொருளைத்தெரிந்து கொண்டால் பாவம், ராகம், தாளம் இவைகளை நன்றாக அறிந்து அனுபவிக்கலாமென்றும் அவர்கள் சொன்னார்கள். இவ்விதமிருந்தும் சாஹித்தியம் இரண்டாம் பக்ஷம், சாஹித்தியம் தேவையில்லை, சாஹித்தியம் தேவையில்லை யென்பதால் தமிழ்ப் பாட்டுகள் வேண்டாம், இயக்கம் பிசகானதென்று சிலர் முடிவுகட்டிப் பேசிவிடுகிறார்கள். இம்மாதிரியான கட்சியானது வாதத்தின் வேகத்தில் உண்டானதென்பதைத் தவிர வேறில்லை.

மற்றொரு விஷயம் சொல்லப்படுகிறது. தெலுங்குப் பாட்டுகள் பாடக்கூடாதென்று பாடகர்களை நிர்ப்பந்தம் செய்வது சரியல்லவென்று சொல்லுகிறார்கள். ஏதோ அவ்விதம் நிர்ப்பந்தம் செய்யும் எண்ணம் தமிழிசை இயக்கத்தில் சேர்ந்தவர்களுக்கு இருப்பதுபோல் அர்த்தமாகிறது. மேலும், தமிழில் பாடவேண்டுமென்று வற்புறுத்தினால் பாடகர்களுடைய கற்பனா சக்திக்கும் சங்கீதப் போக்கிற்கும் புறம்பாகுமென்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்திலுள்ள தப்பு அபிப்பிராயத்தை நாம் மாற்ற வேண்டியது அவசியம். தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் பாடவே கூடாதென்று எனக்குத் தெரிந்தமட்டில் ஒருவரும் சொல்ல

வில்லை. நமது வித்துவான்கள் தமிழிலும் பாடவல்லவர்கள். தாய்ப் பாஷையான தமிழில் பாடி ஜனங்களைத் திருப்திப்படுத்தக்கூடியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த நம்பிக்கையால் அவர்களைத் தமிழில் பாடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ் என்றால் தள்ளுபடி; தலைவேதனை என்று அவர்கள் சொன்னால் அவர்களை யாரும் நிர்ப்பந்தம் செய்யமாட்டார்கள். தமிழில் பாடுங்கள் என்று சொன்னால் அது வித்வான்களின் சங்கீத உணர்ச்சிக்குப் புறம்பானதென்றால் அதை ஒத்துக் கொள்ளமுடியாது. ராகபாணியையாவது, தாளக்கட்டையாவது கை விடச் சொல்லுகிறோமா? தமிழ் நாட்டில் கூடுமானவரையில் தமிழில் அதிகமாகப் பாடுங்கள் என்று சொன்னால் அது சங்கீதமுறைக்கு முரண் ஆகமாட்டாது.

ஸ்ரீமான் கோபால ரெட்டியார் 'தெலுங்கில் பாடாதே' என்று சொல்வது சரியல்லவென்று சொன்னார். எனக்குத் தெரிந்தவரை யாருமே அப்படிச்சொல்லவில்லை. உள்ளூரில் உள்ள தமிழ்ப்பாட்டுக்கு அவசியமானால் பொருளுதவி செய்து ஆதரிக்கலாம் என்றும் சொன்னார். தமிழ்ப் பாட்டுக்கு உள்ளூர்ப்பாட்டென்று ரெட்டியார்பட்டம் கொடுத்துவிட்டார். தெலுங்குதான் உயர்வென்றும், தமிழ் அதைப்போல்சமமான ஸ்தானத்திலிருக்க யோக்கியதை உள்ளதல்லவென்றும் இதன் கருத்தாகும். தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டை மிகுதியாகப் பாடவேண்டுமென்று சொல்வது பிறருக்கு உஷ்ணத்தை உண்டுபண்ணுவதாகுமென்றும் சொன்னார். தெலுங்கு தேசத்தில் தமிழன் ஒருவன் தெலுங்கைப் பற்றிக் கொஞ்சமாவது குறைவாகப் பேசினால் நமது ஆந்திர சகோதரர்களுக்கு எவ்வளவு மனக்கொதிப்பு ஏற்படுமென்பதை நான் விஸ்தாரமாகச் சொல்லவேண்டியதில்லை. நம் தமிழ் நாட்டில், அதிலும் தமிழையே பேசும் திருவையாற்றில், நூற்றில் தொண்ணூற்றொன்பது தமிழர்கள் நிறைந்துள்ள ஒரு கூட்டத்தில் ஆந்திரநாட்டுப் பிரமுகர் ஒருவர் நம் தாய்ப்பாஷையாகிய தமிழைக் குறைவாகப் பேசுவதற்கு தைரியமேற்படுகிறது. இவ்விதமாகப் பேசுவதைக் கேட்பதும், அதை ஒரு சிலர் உத்ஸாகத்துடன் வரவேற்பதும், தமிழர்களிலேயே சிலர் நம் தாய் மொழியாகிய தமிழை இழிவாகப் பேசுவதும் நம் தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியமென்று சொல்வதைத்தவிர வேறில்லை.

பக்தி பரவசத்தினால் பக்திரசமும் சங்கீதஞானமும் நிறைந்துள்ள அருமையான பல கீர்த்தனங்களை இயற்றி, கர்நாடக சங்கீதத்தைப்பிரபலப் படுத்தி, அதில் முதன்மை ஸ்தானத்தைப் பெற்று விளங்கும் ஸ்ரீ தியாகராஜரிடம் தமிழ் மக்கள் வைத்திருக்கும் உண்மையான மதிப்பும்மரியாதை

யும் காரணமாக அம்மஹான் சித்தி அடைந்த புண்ணிய தினத்தைத் தமிழர்கள் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் ஒருமனப்பட்டு மஹா க்ஷேத்திரமாகிய திருவையாற்றில் ஆராதனை செய்து வணங்கும் அந்தப் புனிதமான சமயத்தில் அவசியமில்லாத ஒரு விவாதத்தைப் புகுத்தி அங்கு கூடியிருந்த பக்தர்கள் மனதைப் புண்படுத்தியது பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

கனவான்களே!

கர்நாடக சங்கீத முறையிலேயே தமிழில் அதிகமாகப் பாட்டுகள் பாடப்படவேண்டியதென்பதும் மறைந்து கிடக்கும் பாட்டுகளை வெளிப்படுத்த வேண்டுமென்பதுமே இம் மகாநாட்டின் நோக்கம். கலை ஞானமும் கலை உணர்ச்சியும் பெருத்த தமிழ் நாட்டில், தமிழராய்ப் பிறந்து, தமிழிலேயே தினசரி பேசிவரும் வித்வான்கள் கம்பர் கையாண்டதும், ஔவையார் வழங்கி வந்ததும், நாயன்மார் ஆழ்வாராதிகளின் பக்திக்கு உதவியாய் இருந்ததுமான நமது தாய் மொழியான தமிழை சங்கீதத் துறையில் தள்ளுபடி செய்யாமல், அதில் பாட்டுகள் பாடி வரவேண்டுமென்பது தமிழரின் தாகம்.

ஆகையால், வித்வான்கள் எல்லோரும் ஒரு மனதுடன் ஒத்துழைத்து உதவிபுரிந்து, தமிழிசைக்குப் பெருமை தந்து, தமிழர்கள் எல்லோருக்குமே ஆனந்தத்தை விளைவிக்கச் செய்வது தங்கள் தாய் மொழிக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

கனவான்களே! இந்த சமயத்தில் உங்கள் நேரத்தை நான் அதிகமாக எடுத்துக்கொண்டுவிட்டேன். பொறுமையோடு நீங்கள் இருந்து கேட்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கு கூடியிருக்கும் வித்வான்கள் இந்த மகாநாட்டின் நோக்கம் நிறைவேறுவதற்கான காரியங்களைச் செய்யத் தொடங்குமாறு வேண்டுகிறேன். உங்களுடைய சௌகரியத்திற்காக நாங்கள் இங்கே செய்திருக்கும் ஏற்பாடுகள் குறைவாக இருந்த போதிலும் தாராளமனதுடன் அவைகளைப் பொறுத்துக்கொண்டு மன்னிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தேன்படிக்கு மமுதாமுன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியே னுவொன்றோ
வூன்படிக்கு முளம்படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
தான்படிக்கு மநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே."

—திருவருட்பா.

உ

மாயாவாதிகளின் கொள்கை.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமி குருக்களவர்கள்.)

மாயாவாதிகள் ஆத்மாவை உண்டென்று ஒத்துக்கொள்ளினும், அவ்வாத்மாவின் ஆன்மாவாகிய பரமான்ம சிவத்தை இல்லையென்று வாதிக்கின்றார்கள். ஆன்மாவுக்கு மேலான ஆன்மாஇல்லையென்றும் ஆன்மாவே பிரமமாமென்றும்சொல்கின்றனர். அஃதாவதுஆன்மாவேயன்றிக் கடவுள்ஒருவர்இல்லையென்பது அவர்மதம். நாமே கடவுள், நம்மின்மேலொரு கடவுளில்லை யென்பது அவர் மதம். அதுபற்றியன்றோ தாயுமானசுவாமிகளும் "நாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என இவரை வெறுப்பாராயினர். இவர் சிவம் பிரமம் என்னுஞ்சொற்களை எடுத்தாள்வதினால் நம்மின் மேற்பட்ட கடவுளையே சிவம் பிரமம் என்று சொல்லுவதாக நம்பி விடக்கூடாது. நாமே சிவம், நாமே பிரமம், எம்மின்மேற் சிவமில்லை, எம்மின்மேற் பிரமமில்லை யென்று வாதித்தலையும் நோக்க வேண்டும்.

மரயாவாதிகளை எகாத்மவாதிகளென்று மற்றவர்கள் சொன்னால் கோபங்கொள்கின்றார்கள். தாம் எகாத்மவாதிகளல்லவென்று எண்ணமிருப்பின் வேறு யாது சொல்வது? அவ்வாறின்றி, கடவுளென்றும், ஆத்மாவென்றும், பாசமென்றும் மூன்று பொருளில்லை. எகமாகிய ஆன்மாவேயுள்ளது என்பாரை எகாத்மவாதிகளென்றால் அது நிந்தனையாகுமா? நிந்தனையாகக் காணப்பட்டால் எகாத்மாவேயுள்ளதென வாதிப்பதை விட்டு முப்பொருள்களும் உண்டென்று ஒத்துக்கொள்வதே சிறப்பு.

அவர்கள் ஆத்மா என்னுஞ் சொல்லுக்குப் பொருள் வியாபகமான பிரமம் அல்லது சிவம் எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றதாம். ஆன்ம சப்தம் தனியே பிரமத்தை மாத்திரம் குறிக்குமாயின் இவர்கள் வாதம் சபலமாம்.

பரமான்மா சச்சிதானந்த வஸ்துவாதலால் அது எவ்வாற்றாலும் பாசசம்பந்த மடைந்து சோபாதிகனாவதில்லை. அத்தன்மையில்லாத மற்றைய ஆன்மாவே பாசசம்பந்தம் பொருந்திச் சோபாதிகனாயும், அந்த உமாபதிநிலையிலே சீவான்மாவாகியும் இங்ஙனம் வேறுபடும். இவ்வுண்மையை யறியாதார் பரமான்மா, ஆன்மா, சீவான்மா என்னுஞ் சொற்களை வறிதே பொருளற வழங்கி மாயாவாத வலையில் சிக்கி இடர்ப்படுவர்.

பந்தமோட்சத்திற்கு உட்படாதது பரமாத்மா. பந்தமோட்சத்திற்குட்படுவது ஆத்மா. இந்த ஆத்மாவே உபாதிநிலையில் சீவான்மா வெனப்படும்.

உடலுக்கு உயிர் எப்படியோ அப்படியே உயிருக்கு உயிராயுள்ளது சிவமென்று சாத்திரங்கள் கூறுதலால், ஆன்மாவும் அவ்

வான்மாவின் ஆன்மாவும்என இரண்டுவித ஆன்மா வேறுபடுத்திக் காணுமாறு வேதங்கள் ஆன்மாவென்று ஒன்றைத் தனித்துச் சொல்லியும், பரமான்மாவென்று ஒன்றை விசேஷணமாகச்சொல்லியும் காட்டுகின்றன. ஆன்ம சப்தம் தனித்துப் பிரமத்தையே குறிக்குமாயின், அதற்குப் "பரம்" என விசேஷணம் சொல்ல வேண்டியதில்லை. வேதம் ஆத்மாவென்றும் பரமாத்மா வென்றுங் கூறுதலால், அவ்விரண்டிற்கும் வேறுபாடு காணப்படுதல் சொல்லாமேயமையும். ஆத்ம சப்தம் இருபொருளிற் செல்லுதலால், அவ்விரண்டிற்கும் வேறுபாடு கற்பிக்கும் நிமித்தம் ஒன்றைவறிதே வழங்கியும், ஒன்றை அடைகொடுத்து வழங்கியும் உண்மையைக் காட்டுவதாயிற்று.

மாயாவாதிகள் இனியேனும் இம்மதம் சித்தாந்திகளால் அங்கீகரிக்கத்தக்கவல்லவென்று அறிந்து அடங்குவார்களாக.

இராமநாட் சப் கோர்ட்டு. O. S. No. 109 of 1940.

ராம. கும. சு. குமரப்பசெட்டியார்	வாதி.
ராம. கு. ராம. ராமசாமி செட்டியார்	பிரதிவாதி.

டி நிம்பரில் பிரதிவாதி வணக்கமாயெழுதிக்கொண்ட மன்னிப்பு. இந்த நிம்பர் வாதியான ராம. கும. சு. குமரப்பசெட்டியாரை குறையாக அவதூறுசெய்து ஆக்கியோர் பெயரில்லாமல் தபாலில் வந்த ஒருபாட்டை தலையங்கமும் பிற்குறிப்பும் நான் சேர்த்து எழுதி நான் பிரசுரித்துவரும் என்னுடைய சிவநேசன் 1-10-1939ல் வெளிப்படுத்தியது முற்றிலும் தவறென்றுணருகிறேன். அதில் டி குமரப்பசெட்டியாரின் குறைகளாகக் குறிக்கப்படும் செய்திகள் ஒன்றும் உண்மையில்லை என்று அந்தப் பாட்டின் பொருளைப்புலவர்கள்விளக்கியபின் நான் அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

அதில் கண்ட குற்றங்கள் ஒன்றும் டி குமரப்பச் செட்டியாரிடம் கிடையாது. ஆதலால் அந்த அவதூறுப்பாட்டு பிரசுரத்தை இதன்மூலம் தவறென்றுஒப்புக்கொண்டு வாபஸ்வாங்கிக்கொள்கிறேன். டி சிவநேசன் 1-1-1939 வெளியீட்டில் செய்திக்குறிப்பில் பலவான்குடி சிவன்கோயில் நிர்வாகத்தை டி குமரப்பசெட்டியார் சுயநலங்கருதி பெற்றுக்கொண்டது போலவும் அதை கிரமமாக ஒப்புவிக்க வகைதெரியாமல் கோர்ட்டு அமீனாக வந்த சாயபு மூலம் ஒப்புவித்தாரென்றும் நான் எழுதியது சரியல்ல. அவர் ஒழுங்காகவே நிர்வாகத்தை ஏற்று நல்லெண்ணத்தோடும் முறையாகவும் நடத்தியிருக்கிறார். பிறகுகோர்ட்டு டிக்கிரிப்படி அந்த டிக்கிரி வாதிக்கு வாங்கி ஒப்புவிக்கும்படி கோர்ட்டு உத்திரவு பிறந்து அதை நிறைவேற்ற வந்த அமீனா அழகர்சாமிநாயுடு இடம் கோர்ட்டு உத்திரவை உல்லங்கனம் பண்ணக்கூடாதென்று நினைத்து டி குமரப்ப செட்டியார் ஒப்புவித்ததும் சரி. அதற்குமாறாக நான் எழுதிய குறிப்பு பிசகு என்று உணர்ந்துவருந்துகிறேன். ஆகவே டி 1939 ஜனவரி 1உ செய்திக்குறிப்பாகவும், அக்டோபர் 1உ ஆசிரியப்பாவாகவும் டி குமரப்பசெட்டியாருக்கு கௌரவக்குறைவாகநான் வெளியிட்டதற்காக மனமாரமன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

11—12—1941. ராம. கு. ராம. இராமசாமி செட்டி.

ஞாயிற்று வழிபாடு.

(திரு, பண்டித வ. சு. இராஜ ஐயனாரவர்கள்.)

ஞாயிறு என்னும் தமிழ்ச்சொல் சூரியனைக் குறிக்கும். சூரியன் என்பது வடமொழி அல்லது சம்ஸ்கிருதச் சொல்லாகும். தமிழ் நாட்டவர் நீண்ட பழைய காலத்திலிருந்து ஞாயிற்றை வெய்யோன், வெயிலோன், பகலவன், எல்லோன், என்றூழ், கனலி, சுடரவன், பரிதி முதலான பல தமிழ்ச் சொற்களால் வழங்கி வந்திருக்கின்றனர்.

விடியற்காலையில் உறக்கத்தில் இருந்து எழுகின்ற மக்கட் கூட்டத்தார் அப்போது கிழக்கே பளபள என்று தோன்றும் ஞாயிற்றைக்கண்டு மிகுந்ததோர் உவகையும் கிளர்ச்சியுமடைகின்றனர். மற்றை விலங்கினங்களும் பறவைக் கூட்டங்களும் அடையும் மகிழ்ச்சிக்கோ அளவில்லை. கிழக்கே எழும் ஞாயிற்றைக் கண்டு மகிழப்பெறாத உயிர்களோ இம்மாநில வரைப்பில் இல்லையாகும். பளபளவென்று எழுகின்ற ஞாயிற்றின் கதிர்கள் பல்லாயிரம் பொற்கம்பிகள் போலத் தோன்றுகின்றன. பொன்னுருண்டைபோல் மேலே எழும் ஞாயிறு எல்லா உயிர்களையும் இன்புறுத்துகின்றது. இராப்பொழுதில் எங்கும் பரவிக்கிடந்த இருளை ஞாயிற்றின் ஒளி துரத்தித் துரத்தி வந்துகொண்டே வானத்தில் எழுகின்றது. வானில் எழுகின்ற ஞாயிற்றின் இச்செயல் கரிய நிறத்தையுடைய அரக்கர் கூட்டத்தைத் தன் கூரிய அம்புகளால் எய்து தொலைத்த முருகக் கடவுளின் செயலை எமக்கு நினைப்பூட்டுகின்றது. மட்டுக்கடங்காதபேரொளியுடன் தோன்றிவரும் பரிதி வானவற்குக் கீழே பச்சைப்பசேலென நிற்கும் கடலானது அப்பெருமான் ஏறி ஊரும் மயிலின் சாயலையும், அக்கடலின்கண் அடித்து அடித்து எழும் அலைகள், அம்மயிலின் இறக்கைகளையும், அவ்வலைகள் அடித்துவரும் காட்சி அம்மயில் பறந்து செல்லுதலையும் எமக்கு நினைவில் கொண்டு வருகின்றது. அருள் ஒளி வடிவினனான இறைவன் உயிர்கள் தம் அறியாமையைப்போக்கி அறிவு விளக்கத்தைத் தரும் பான்மைபோல, ஞாயிறும் உலகத்து இருளை இல்லாமற் செய்து உயிர்களுக்கு வெளிச்சத்தைத் தருகின்றதன்றோ! இதுமட்டுமோ! உயிர்களிடத்து நின்ற அறியாமையைப் போக்குதற்கு அருள் ஒளியினனாகிய இறைவன் அவற்றிற்குப் பல்வேறு அறிவு முயற்சிகளை வழங்கிவருதல் போல, இவ்வென்றூழும் உறக்கத்தே கிடந்த உயிர்களைத் தான் தோன்றுதலால் பலவகைத் தொழில் முயற்சிகளிலேபுகுத்திவைக்கின்றனன். ஞாயிறு தோன்றும் விடியற்காலையில் எல்லா உயிர்த்தொகுதிகளிலும் இன்பமும் கிளர்ச்சியும் தொழில் முனைப்பும் கொள்ளுகின்றன. தென்னந்தோப்பு

களில் பச்சைக்கிளிகள் இரைகின்றன. மாந்தோப்புகளிலும் ஓங்கிவளர்ந்து தளிர்த்து நிற்கும் புளியமரங்களிலும் குயில்கள் இனிய குரலெடுத்துப் பாடுகின்றன. காக்கைகள் கரைகின்றன. தாமரைப் பொய்கைகள் நோக்கி வண்டுகள் மகிழ்ச்சிமிக்குப் பறந்து செல்லுகின்றன. இராக்காலங்களிலெல்லாம் ஆக்கொட்டிலில் கிடந்த ஆக்கூட்டங்கள் பச்சைப் புல்வெளிகளுக்கு மேய்ச்சலுக்குச் செல்லுகின்றன. நெற்போர்க்குவியல்களின் கால்களில், ஆத்தி நாரால் திரித்தகயிறுகளால் கட்டப்பட்டிருந்த எருமைக் கன்றுகள் தம் தாய்மாரை அழைப்பனபோல் குழறுகின்றன. கடாக்களைத் தேடி, வைகறைகொண்டு வந்த உழவர் இளைஞர்கள் உழவின் பொருட்டுக் கழனிக்குச் செல்கின்றனர். உள்நாடுகளிலிருந்து நெல்லின் குப்பையும் வாசனைச் சரக்குகளும் ஏற்றிவந்த வண்டிக்காரர்கள் கடற்றுறைப் பட்டினத்து ஆவணமுற்றங்களில் தங்கள் பொதிகளை இறக்குகின்றனர். பட்டினங்கள் நகரங்களிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் தங்கள் பல்வேறு நிலையங்களுக்குச் செல்கின்றனர். பள்ளிக்கூடச்சிறுவர்கள் தங்கள் தங்கள் கல்வி நிலையங்கட்குச் செல்கின்றனர். புகைவண்டித் தொடர்களும் மின் வண்டிகளும் அரசினர் அலுவல் பார்ப்பவர்களை ஏற்றி வந்து வண்டி நிலையங்களில் விட்டு வைக்கின்றன. இறைவன்எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களைக் குருமார் திறந்து வழிபாட்டின் பொருட்டு ஒழுங்கு செய்கின்றார். ஆற்றங்கரைகளில் நீராடி நிற்கும் மைந்தரும் மடவாரும் தங்கள் தங்கள் ஆடைகளைத் தோய்த்து உலர்த்துகின்றனர். கிழக்கில் உறைபவனே! நினக்கு வணக்கம், என்றும் மாறுதல் இல்லாதவனே! நினக்கு வணக்கம், எல்லா உயிர்களையும் மகிழ்விப்பவனே! நினக்கு வணக்கம், எல்லாப் பொருள்களையும் ஊடுருவிச்செல்பவனே! நினக்கு வணக்கம், எல்லா உயிர்க்கும் இயக்கத்தைத் தருபவனே! நினக்கு வணக்கம் என்னும் அரவம் ஊர் எங்கும் எழும்புகின்றது. இங்ஙனமாக தொழில் முயற்சிகளும், ஊக்கமும், கிளர்ச்சியும், இன்பமும் எல்லா உயிர்களிடத்தும் உண்டாகி நடைபெறுவதற்கு ஏதுவாயது பரிதிவானவனது தோற்றமே என்பது நன்கு புலனாகின்றதன்றோ!

இனி, நிலவுலகில் உள்ள உயிர்ப்பொருள்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவு பகலைச் செய்யும் ஞாயிற்றின் உதவியினால்தான் உண்டாகின்றது. ஞாயிறு தோன்றாதாயின் நெல் விளைச்சலும், கீரை, காய், கனிகளும் நமக்குக் கிடைக்குமோ? இவ்வுணவுகளை உழவர்களும் பயிர் செய்வாரும் அவற்றை விளைவித்துக் கொள்வதற்குக் கதிரவன் ஒளியை நாடுகின்றனர். பகலோன் இல்லாத இடங்களில் கொடிவகைகளும், காய்கனிதரும் உயர்ந்த மரங்களும் உண்டாக மாட்டா. சில

வரைப்பின் வடபக்கத்திற் போல நாம் உண்ணும் நீர் உறைந்து பனிக் கட்டியாகாமலும் நாம் வருந்தி நில்லாமலும் நம்மைப்பாதுகாப்பது அனற் பிழம்பு வடிவினதான ஞாயிறு அல்லவோ? இவ்வாறு ஞாயிற்றின் உதவி யில்லா தொழியின் நாம் உயிர்வாழ்தலே கூடாது. நமது அறிவு விளக் கத்திற்கும் தொழின் முயற்சிக்கும் இடந்தந்து நம்மைப் பாதுகாத்து எல்லா உயிர்களின் உயிர் வாழ்க்கைக்கும் முதலாய் நிற்றலால் நம்முன் னோரான தமிழ் நன்மக்கள் ஞாயிற்றையே கடவுளாகவோ அல்லது கடவுளின் [illegible]ள் ஒளிவடிவிற்கு அடையாளமாகவோ கருதிக் காலையில் அஃது எழா நின்றபோதும் மாலையில் அஃது மறையுங் காலையும் அதற்கு வணக்கம் செலுத்தினர்.

இனி, உலகத்தில் நடைபெறும் ஒழுக்கங்களெல்லாம் ஒளியுடைப் பொருள்களின் உதவியால் நடைபெறக்கண்டதால் அவ்வொளியுடைப் பொருள்களை அப்பெருமானுக்குக் கண்களாகக் கருதினர். உலகின்கட் காணப்படும் ஒளியுடைப் பொருள் ஞாயிறு, திங்கள், தீ யென்னும் மூன்றுமேயாம். ஆகவே சிவபிரானுக்கு ஞாயிறு வலக்கண்ணாகவும் திங்கள் இடக்கண்ணாகவும் தீ நெற்றிக்கண்ணாகவும் கொள்ளப்பட்டன. இம்மூன்றொளியுடைப் பொருள்களும் இறைவனுக்கு மூன்றுகண்கள் போல் விளங்குவதோடு அருள் ஒளியினனாகிய அவனுக்குத் திருமேனி போலவும் பொலிதலால் அம்மூன்றும் அவ்வொப்புமைபற்றி அம்முழு முதற் கடவுளாகவே வைத்து, வணங்குதலும் வாழ்த்துதலும் செய்யப் படும். இதுபற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற, வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

(தொல்-புற-இயல் 331)

என ஓதினர். இச்சூத்திரத்திற்கு முதல் உரை செய்த இளம்பூரணர் மெய்யுரை கண்டிலர். நச்சினார்க்கினியர் "கொடிநிலை" என்பதற்கு * "வெஞ்சிலை மண்டலம்" எனவும் மெய்யுரை கண்டு மொழிந்தனரேனும் "கந்தழி" என்பதற்கு "ஒருபற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த ஒருபொருள்" என ஒருவாற்றாற் பொருந்தா உரை கூறினர்.

"கந்தழி" என்பது முழுமுதற் கடவுளை மட்டும் உணர்த்துவதாயின் அவர் அதற்குக்கூறிய உரை பொருந்துவதேயாம். மற்றுக் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றினை வாழ்த்தும் வாழ்த்துரையுங் கடவுள் வாழ்த்தோடொப்பக் கருதுமாறுவரும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் மேற்காட்டிய சூத்திரத்தில் அருளிச் செய்தலின் அம்மூன்றும் முழுமுதற் கடவுளாகா என்பது ஆசிரியர் கருத்தாதல் பெற்றாம்.

பெறவே கடவுளோடு ஒருபுடை யொப்பக் கருதப்படும் "கந்தழி" என்பதற்கு முழுமுதற் கடவுளிலக்கணமாகிய "ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த ஒரு பொருள்" என்பதனை

---

* வெண் கதிர் மண்டிலம் எனவும், வள்ளி என்பதற்குத் தண்கதிர் மண்டிலம் எனவும்.

எற்றுதல் ஆசிரியர் கருத்தமைந்த உரையாகாமையும் தெற்றெனவிளங்கும். அதற்கு மெய்யுரை இன்னதென இனி ஆராய்வாம்.

"கந்தழி என்றது தீப்பிழம்பினையேயாம். அஃது அப்பொருள் தருமாறு எங்ஙனமெனில் "கந்து" என்னுஞ் சொல் "பற்றுக்கோடு" என்னும் பொருட்டாதல் "மறங் கந்து ஆக நல்லமர் வீந்த" (புறநானூறு 93), என்பதனாலும் அதன் உரையாலும் பலப்படும். "அழி" என்பது அழிப்பது, எனவே "கந்தழி" என்பது தான்கொண்ட பற்றுக்கோட்டினைத் தானே அழிப்பது என்று பொருள் தருவதாகும். இனி, தீயானது தான்பற்றிய விறகினையுந் திரி நெய்யினையு மழித்துவிடுதல் எவரும் அறிந்ததேயாம். அதனால் "கந்தழி" என்பது தீப்பிழம்பேயாயிற்று.

மேலும், ஞாயிறு, திங்கள் என்னும் இரண்டு ஒளிப்பொருள்களோடு இயைபுடையது அனற் பிழம்பேயல்லது, பிறிதின்மையின் "கந்தழி" என்பதற்கு அவ்விரண்டோடு இயைபு சிறிதுமில்லா வேறு பொருளுரைத்தல் ஆசிரியர் கருத்திற்கு முற்றும் முரணுமென்க.

இனி, ஞாயிறு, திங்கள், தீ என்னும் வெளிப்படைச்சொற்களாற்சொல்லாமல் கொடிநிலை, கந்தழி,வள்ளிஎன்னும்திரிசொற்களால்ஆசிரியன் அவற்றைக்கிளர்ந்தது என்னை எனின் ஞாயிறு, தீ, திங்கள் என்னுஞ் சொற்கள் கற்றோர் முதல் கல்லாதார் ஈறுன எல்லாராலும் வழங்கப்படுதலின். அச் சொற்கள் ஒளியுடைய அப்பொருள்களின் கடவுட்டன்மையினை நினைவுறுத்தமாட்டா. ஆதலால் அருளொளி உருவினனாகிய இறைவன் அவ்வொளியுடைப் பொருள்களைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அவற்றின்கண் விளங்கித் தோன்றி எல்லா உயிர்களின் அறிவையும் மறைக்கும் புறவிருள் அகவிருள் என்னும் இரண்டினையும் ஓட்டி அவை தமக்கு அவ்வறிவை விளங்கச்செய்தல் குறித்து அம்மூன்றுங் கடவுட்டன்மையுடையவாதல் தெரிவிப்பான், அவை தம்மைக் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் பெயர்களால் சிறந்தெடுத்துக் கூறினர்.

கொடிநிலை என்னும் இருமொழித் தொடரிற் கொடி என்பது கிழக்குத் திசையினை உணர்த்துதல்.

"பொய்தீர் உலகம் எடுத்த கொடி மிசையறுபண்டிலம் வேட்டனள்"

(கலித்தொகை 141)

என்று உரைகாரர் நச்சினார்க்கினியர்ஆண்டெடுத்துக்காட்டிய செய்யுளால் நன்கு விளங்கும். விளங்கவே கீழ்த்திசைக்கண்ணே வந்து நிற்கும் கதிரொளியை அஃது உணர்த்துதல் புலனாகும். திங்களும் இல்லாத இரவின் எல்லை எல்லாம் கண்ணொளியை மறைத்த இருளால் அறிவொளியும் கண்ணொளியும் மறைபட்டு அயர்ந்துறங்கிய உயிர்த்தொகைகள் அத்தனையும் கீழ்த்திசைக் கதிரொளி வந்து நிலைபெற்ற அளவானே தங்கண்ணொளியும் கருத்தொளியும் ஒருங்கு விளங்கப்பெற்று முயற்சியுடையவாதல் கண்டாமன்றே. இங்ஙனமாக உயிர்ப்பன்மைகளின் அறிவும் முயற்சியும் விளங்கி, நடைபெறுதற்குக் கீழ்த்திசைக்கண் எழுந்த ஞாயிறு ஏதுவாதலின் அக் கீழ்த்திசைக் கதிரொளி கடவுட்டன்மை யுடையதென்பது அறிவுறுத்தற்கே அதற்குக் கொடிநிலை என்னுஞ் சொல்லைப் பேரறிவுமிக்க ஆசிரியன் வழங்குவானாயினன்.

இனி, தீ, நெருப்பு, அழல், தழல் முதலான சொற்கள் மக்கள் எல்லவராலும் வழங்கப்படுதல் நோக்கி அவை அதன் கடவுட்டன்மையினை உணர்த்தமாட்டா என்றறிந்த ஆசிரியன் அதன் கடவுட்டன்மையினை உணர்த்துதற்கேற்ற "சுக்கழி" என்னுஞ் சொல்லால் அதனைக் குறிப்பா ரூயினன். தனக்கொரு பற்றுக்கோடுமின்றித் தானே எல்லாவற்றிற்கும் ஒரு பற்றுக்கோடாய் நிற்பதும் தான் பற்றிய உயிரின் பருப்பொருள் அறிவினை யழித்து அவ்வறிவினை நுண்ணிதாக்கி அதனைத்தன் தன்மையாய் நிற்கச்செய்வதும், தான் எதனாலும் பற்றப்படாத அருவமாய்ச் சுட்டுப்புலனாலும் தொடரப்படுவதல்லாத உருவமாய் இவ்வாறு இருதிறமும் விராய அருவுருவாய் நின்று திகழ்வதூஉம் எல்லாம் வல்ல இறைவனியல்பாதல் போலத் தீப்பிழம்பும் தானிருத்தற்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமென்பதின்றாய் எல்லா உயிர்ப்பொருள்களின் இருப்புக்குந் தானொரு பற்றுக்கோடாய் அவற்றினுள்ளும் ஏனைப் பொருள்களினும் விரவி நிற்றலானும் தான் பற்றிக்கொண்டு தோன்றும் விறகு திரிமுதலியவற்றின் பருப்பொருட் டன்மையை யழித்து அவற்றை நுண் பொருளாக்குவதுடன் தான் பற்றி எரியுங்காறும் அவற்றைத்தன் நிறமாக விளக்கச்செய்தலானும் தான் புலப்பட்டுத் தோன்றாத வழி, எக்குமுள்ள அருவாய் விளக்கு, விறகு முதலியவற்றிற் புலப்பட்டுத் தோன்றிய வழியும் எவராலும் பிடிக்கப்படுவதல்லாத உருவமாய் இவ்வாறு அருவும் உருவுமுமாய் இருதிறமும் ஒருங்கு கலந்த இயல்பிற்றுமாகலானும் தீ கடவுட்டன்மையுடையதாதல் துணியப்படும். ஆகவே தீப்பிழம்பின் இலக்கணத்தை உணர்த்துதற்கு வாய்ப்புடையதாதல் பற்றியே ஆசிரியன் "சுந்தழி" என்னும் சொற்கொண்டு அதனையுங் கடவுள் வாழ்த்தின்கண் படுத்தினன்.

இதுவேயுமன்றிக் கதிரொளி வெய்யதாகலின் அஃது ஆண்டன்மைப்பாற்படும். நிலாவொளி தண்ணிதாகலின் அஃது பெண்டன்மைப் பாற்படும். அப்பெண்பாற்றன்மையினை வள்ளி என்னும் சொல்லின் இகர இறுதி நன்குணர்த்துதலின் அது திங்கள் மண்டிலத்தின் வண்மைத் தன்மையினை அறிவிக்கும்பெயராதற்கு மிகவும்வாய்ப்புடைத்தாதல்காண்க.

எண்டுக் காட்டிய இவ்வியல்புகள் ஞாயிறு நெருப்பின் தன்மையும் ஆண்டன்மையு முடைமையானும், திங்கள் நீரின் தன்மையும் பெண்டன்மையு முடைமையானும் என்பது. அல்லதூஉம் "வெண்கதிர் அமிழ்தம் தேவர்க்கு வழங்கலானும் வள்ளி என்பதுமாம்" என்று நச்சினார்க்கினியர் கூறிய உரையானும் புலனாதல் கண்டுகொள்க. இறைவன் ஒருபால் ஆண்டன்மையனாயிருந்து அழித்தற்றொழிலினையும் மற்றொருபாற் பெண்டன்மையனாயிருந்து படைத்தல் காத்தற்றொழிலினையும் செய்கின்றனனாகலின் அவன்றன் ஆண்கூற்றின்பாற்பட்ட "கொடிநிலை" போல, ஈண்டு "வள்ளி" என்பது அவன்றன் பெண்கூற்றின்பாற்பட்டு நிற்றலும் நுனுகி உணர்ந்து கொள்க. இனி, தமிழ் நாட்டுச் சான்றோர் மிகப் பழைய காலந்தொட்டே இறைவனைத் தீவடிவில் வைத்து வழங்கி வந்தனர் என்பதும், அத்தீ தான் ஞாயிறு, திங்கள், தீ என முத்திறப்படுதலின் அவற்றிற்கு அடையாளமாய் ஞாயிற்றை ஒத்த வட்டவடிவிலும், பிறையை ஒத்தவில் [illegible] ஒத்த முக்கோண வடிவிலும் குழிகள் வெட்டுவித்து [illegible] அவற்றின்கண்

வளர்த்து, அதற்றினை வழிபட்டு வரலாயினர் என்பதும் அறியற்பாலன. தலைச் சங்கத்திருந்த முரஞ்சியூர் முடிநாகராயர் காலத்திலேயே பொதியமலை முதல் இமயமலைகாறும் பரவியிருந்த தமிழ்நாட்டு அந்தணர் முத்தீ வேள்விகள் வேட்டமை,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே." (புறநா-2)

என்று அவர் பாடியவற்றானறியப்படும். இம்முத்தீயை வளர்க்கும் வேள்விக்குன்றங்களுள் ஒன்று வட்டமாய் அமைக்கப்படுதல் "சதபதபிரமாணம்" என்னும் வடநூலுள் சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றிரண்டும் வில்வடிவும் முக்கோண வடிவுமாய் அமைக்கப்படுதல்.

"மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்னும் திருமுருகாற்றுப்படையடிக்கு நச்சினார்க்கினியர் உரையானுங் கண்டு கொள்க.

பண்டைக்காலத்தில் இருந்த தண்டமிழ்ச் சான்றோர் தாம், ஞாயிறு, திங்கள், தீ யென்னும் முத்தீயைவணங்குதற்கு அறிகுறியாக அம்மூன்றன் வடிவுபோன்ற குண்டங்களை நிலத்தின்கண் வெட்டுவித்து அவற்றின்கண் வேள்விவேட்ட நுட்பம் அறியாத பிற்காலத்தார் இக்குன்றங்களில் ஒன்றன்வடிவை நாற்கோணமாக்கிப் பிழைபட்டார். இனி இம்முத்தீயினையும் வடநூலார் ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என வழங்கினரேனும் அவற்றுள் ஆகவநீயம், காருகபத்தியம் என்னும் இரண்டுமே சதபத பிரமாணம் முதலிய பழைய வடநூல்களிற் காணப்படுகின்றன. ஏனைத் "தக்ஷிணாக்கினி" என்னும் பெயர் அவற்றின்கட் காணப்படுகின்றிலது. இருக்குவேதத்திலும் தீக்கடவுளுக்கு மூன்றிருப்பிடங்கள் மட்டும் சொல்லப்படுகின்றனவேயல்லது, அம்மூன்றின் பெயர்களாதல் "தக்ஷிணாக்கினி" என்னும் பெயராதல் ஆண்டுச் சொல்லப்படவில்லை. மற்றுப் புறநானூற்றுஉரையாசிரியரோ "தக்ஷிணாக்கினி"யைத் "தென்றிசையங்கி" என்றுரைக்கின்றார்.

"தென்றிசையங்கி" என்பது தென்றிசைக்கண்ணதாகிய தமிழ் நாட்டிலே வேட்கப்படுந் தீ என்று பொருள்படுவதாகும். தீயானது எல்லாத் திசைகளிலுமுள்ள எல்லா நாடுகளுக்கு முரித்தாகவும் அதனைத் தென்றிசைக்கண்ணதாகிய தமிழ் நாட்டிற்கே வரைந்து வைத்து "தக்ஷிணாக்கினி" அல்லது "தென்றிசை அங்கி" எனக் கூறியதென்னை? எனநுணுகி நோக்கவல்லார்க்கு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் தீ வடிவின்கட் புலப்பட்டுத் தோன்றி விளங்குதலை முதன்முதலுணர்ந்து அதற்கேற்ற பரிசால் தீயினைவழிபடும் முறைகளைக் கண்டறிந்து, அவ்வழிபாட்டினைச் செய்து வந்தோரும் வருவோரும் தென்றமிழ் நாட்டில் உள்ள தமிழ்ச் சான்றோர்களே என்பது இனிது புலனாகிற்கும்.

—வித்தியாசமாசாரப்பத்திரிகை.